# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 25. வங்கிகள் (வைப்பகங்கள்)

**விளக்கம்** – கோவிட் 19 ற்கு எதிர்வினையாற்றும் தற்போதைய சூழ்நிலையில், ஆட்களுக்கு இடையிலான உடல் இடைவெளியினைப் பேணுதற்கு ஏதுவாக வாடிக்கையாளர்களது எண்ணிக்கையானது ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

**பிரத்தியேக தகவல்கள் /வழிகாட்டல்கள்**
**வங்கி நிர்வாகத்திற்கு:**

- திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் பொறுப்பாக ஒரு பொருத்தமான அதிகாரியை நியமித்தல் மற்றும் புதிய இயல்புநிலை குறித்த புத்தறிவினைப் ஊழியர்களுக்கு வழங்குதல் ஆகியவற்றினை உள்ளடக்கிய கோவிட் -19 னை எதிர்கொள்வதற்கான திட்டம் ஒன்றினை கொண்டிருக்க வேண்டும்.
- நுழைவாயிலில் கை கழுவுவதற்கு சோப்புடன் கால்களால் இயக்கப்படும் / உணரி (sensor) ஊடாக இயக்கப்படும் நீர்த்தொட்டிகளை வழங்கவும்.
- ஊழியர்களுக்கு போதுமான தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் கிடைப்பதை உறுதிசெய்து, அவற்றைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியினைப் பணியாளர்களுக்கு வழங்கும் செயற்பாடுகளை வலுப்படுத்துங்கள்.
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையை பின்பற்றுங்கள் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்) மற்றும் உடல்நிலை சரியில்லாதவர்களுக்கு சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனையைப் பெற வழிகாட்டவும்
- வங்கி (வைப்பகம்) நுழைவாயிலில் உடல் வெப்பநிலைக் கண்காணிப்புக் கருவிகளை அமைத்து, சாதாரண உடல வெப்பநிலை உள்ளவர்கள் மட்டுமே வைப்பகத்தினுள் நுழைய அனுமதிக்கவும்.
- பண எண்ணகங்கள் (cash counters), தன்னியக்கப் பணப்பரிமாற்றப் பொறிகள் (ATMs), பொதுத் தொலைபேசிகள், தொலைநகல் இயந்திரங்கள், கைரேகை வரியோடிகள் (fingerprint scanners) , மேசைகள் மற்றும் பொதுமக்கள் அமரும் இருக்கைகளைச் சுத்தப்படுத்தித் தொற்றுநீக்கம் செய்யுங்கள்.
- பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்கள் மற்றும் மெல்லிழைத் தாள்களைப் போடுவதற்கென கால்களால் இயக்கப்படும் மூடிகள் கொண்ட கழிவுத் தொட்டிகளை வழங்கவும்.
- வரிசையில் நிற்கவேண்டிய இடங்களில் ஒரு மீற்றர் இடைவெளியினைப் பேணத்தக்க வகையில் தரையமைப்பினை ஒழுங்கமைக்குக.
- வளிப்பதனாக்கி / கூரை விசிறிகளை மிதமான வேகத்தில் இயக்கவும்
- வளிப்பதனாக்கிகளின் வடிகட்டிகளை வாரத்திற்கு ஒரு முறை கழுவவும் / சுத்தம் செய்யவும். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கூரை விசிறி தகடுகளை சுத்தம் செய்யுங்கள்.
- வளிப்பதனாக்கிகளின் மின்தேக்கி நீரை வடிகால் அமைப்புக்கு பாதுகாப்பாக வெளியேற்றவும்.
- வாடிக்கையாளர்கள் தமது நாளாந்த வாணிப நடவடிக்கைகளுக்கு முதன்மையாக மின்னணு வங்கி (E-banking) அல்லது தன்னியக்கப் பணப்பரிமாற்றப் பொறிகளை உபயோகிப்பது குறித்துப் பரிசீலிக்குமாறு பரிந்துரைக்கவும்.
- அலுவலக நேரங்களை ஒரு தடவையில் குறைந்தபட்ச வாடிக்கையாளர்களுக்கு இடமளிக்கும் வகையில் மாற்றி அமைக்கவும்.
- மின்தூக்கி ஒன்று இருந்தால், பாதுகாப்பான தூரத்தை பராமரிக்க ஒரு நேரத்தில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை குறைக்க தரையில் உள்ள இடங்களைக் குறிக்கவும்.
- வாடிக்கையாளர்கள் நுழைவாயிலில் கை கழுவுவதற்குரிய வசதிகளை ஏற்படுத்தவும்.
- ஊழியர்கள் தமது கைகளைக் கழுவிக் கொள்வதற்குப் போதுமான வசதிகளை ஏற்படுத்தவும்.
- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பணியாளர் / ஊழியர்கள்**

- முகக்கவசங்களைச் சரியாக அணிந்து கொள்வதுடன் பிற தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களையும் அவ்வாறே அணிந்து கொள்ளுங்கள்.
- முகக்கவசத்தினை அணியும்போது முகக்கவசத்தினையோ அல்லது முகத்தினையோ தொடக்கூடாது.
- காய்ச்சல் /சடுதியான சுவாச நோய் அறிகுறிகளான இருமல், மூக்கிலிருந்து நீர் வடிதல், தொண்டை நோவு மற்றும் சுவாசிப்பதில் சிரமம் ஆகியன தென்பட்டால் வேலைக்குச் செல்லக் கூடாது.
- வளாகத்திற்குள் நுழைவதற்கு முன்னரும் /அங்கிருந்து வெளியேறும்போதும் ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு சவர்க்காரம் மற்றும் தண்ணீர் உபயோகித்துக் கைகளைக் கழுவ வேண்டும். பணியில் ஈடுபடும்போதும் அவ்வாறே அடிக்கடி கைகளைக் கழுவிக் கொள்ளல் வேண்டும்.
- கைரேகை வரியோடிகளைப் (finger scanner) பயன்படுத்திய பிறகு கை தூய்மிப்பானை உபயோகிக்கவும்.
- எவ்வேளையிலும் சக ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களிடம் இருந்து ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணவும்.
- எழுதுகோல்கள் (பேனா) மற்றும் அலைபேசி ஆகியவற்றினை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளக் கூடாது .
- நகைகள், மணிக்கட்டு கடிகாரங்கள் போன்ற அத்தியாவசியமற்ற அணிகலன்களை அணிவதைத் தவிர்க்கவும்.
- முகமன் தெரிவிப்பதற்கு ஆட்களைத் தொடாமல் வாழ்த்தும் முறைகளைப் பயன்படுத்துக.

**வாடிக்கையாளர்**

- முகக்கவசத்தைச் சரியாக அணியுங்கள், அதை அணியும்போது முகக்கவசத்தையோ முகத்தையோ தொடக்கூடாது.
- இருமல், மூக்கு ஒழுகுதல், தொண்டை நோவு, மூச்சுத் திணறல் போன்ற சடுதியான சுவாச நோய் அறிகுறிகள் / காய்ச்சல் இருந்தால் வைப்பக வளாகத்தினுள் நுழையக்கூடாது.
- வளாகத்திற்குள் நுழைவதற்கு முன் சவர்க்காரம் மற்றும் தண்ணீர் / கை தூய்மிப்பானை உபயோகித்துக் கைகளைக் கழுவ வேண்டும்.
- ஒரு மீற்றர் உடல் இடைவெளியை எந்தச் சந்தர்ப்பத்திலும் பேணிக் கொள்க

**அறிவுறுத்தும் முறைகள்**

- சுவரொட்டிகள், மின்னணு திரைகளில் காணொளிகள், ஒலிபெருக்கிகள் வழியாக மற்றும் அறிவிப்புப் பலகைகள் மூலம் அறிவித்தல்.
- சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பணியகத்தினால் இது குறித்த விரிவான வழிகாட்டி வெளியிடப்பட்டுள்ளது.



**சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்**

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020